1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஆர். வீரப்பன் : 1976 ஆம் ஆண்டைப் பற்றிய கேள்விக்கு விவரமான விடை வைக்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆணடில் மொத்தம் 39 பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டில் 14 பத்திரிகைகளின்மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : மாநில தணிக்கை அதிகாரி தந்த அறிக்கயின்மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் அந்த அதிகாரி இப்போதும் தகவல் தந்துக் கொண்டிருக்கிருரா ? அது போன்று தற்போதும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது தணிக்கை அதிகாரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவ்வாறு தடை செய்யப்பட்டதற்கான காரணங்கள்—கிரவுண்ட்ஸ் என்ன ? எந்த அடிப்படையில் தடை செய்யப்பட்டது ? அந்தத் தடைகள் பூராவும் நீக்கப்பட்டனவா ? இல்லை என்ருல் எத்தனை நீக்கப்பட்டன ? பாக்கி எவ்வளவு இருக்கிறது ? நீக்கப்படாமல் இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : தடை செய்வதற்கு இரண்டு அடிப்படைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒன்று, மாநில அரசு தன் சொந்த விருப்பத்தில் தடை செய்திருக்கிறது. இன்னென்று மாநிலத்திலுள்ள மத்திய சர்க்காருடைய தணிக்கை அதிகாரி தெரிவித்த கருத்தின்மீது தடை செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசு தன்னுடைய சொந்தக் கருத்தில் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 1975-76 ஆம் ஆண்டில் 35. மத்திய சர்க்காருடைய அதிகாரி தெரிவித்த கருத்தின் மீது தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 18. மொத்தம் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் அல்லது நூலகள் 53. அதிலே இந்த அரசு வந்ததற்குப் பிறகு 49 தடைகளை நீக்கிவிட்டிருக்கிறது. சில காரணங்களுக்குகாக ஐந்து தடைகள் இப்போது உள்ளன.

'முரசொலி' பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்ட அரசு விளம்பரங்கள்.

*வின 388.—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1975 ஆம் ஆண்டு 'முரசொலி' பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, முரசொலிப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு நிதியாண்டு 1975–76-ல் 10 மாதங்களில் ரூ. 3,46,110.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டில் பத்திரிகை விளம்பரத்திற்காக அரசு செலவழித்த மொத்தத் தொகை எவ்வளவு? எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டில் சுமார் 50 லட்சம் ரூபாய் அளவில் மொத்தச் செலவு செய்யப்பட்டிருக்கிறது? அதிலே மெயில் பத்திரிகைக்கு ரூ. 2,06,841, தினமணி 1,62,433, தினத்தந்தி 7,13,545, முரசொலி 3,46,110, மாலைமுரசு, 1,68,942, தமிழ் முரசு 97,911, விடுதலை 31,816, அலைஓசை 34,247, நவமணி 28,459, நாத்திகம் 24,790, தென்னகம் 195, அறமுரசு 19,528 சுதேசமித்திரன் 8,762, இனமணி 11,860, தினச்சுடர் 1,257 நம்நாடு ஒன்றுமே இல்லை, தினமலர் 289, மாலைமணி 414 நவசக்தி 17,706, பிற மாநிலங்களின் நாளிதழ்கள் 6,17,612, சஞ்சிகைகள் 3,19,869, சிறப்பு மலர்கள் 1,92,063. இந்தச் செலவில் கூட்டுறவுத்துறை விளம்பரமும், அறநிலையத்துறை விளம்பரமும் உள்ளடங்கவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரங்கள் கொடுக்கப்பட்ட விவரங்கள் இங்கே தரப்பட்டன. அதிலே தினத்தந்தி பத்திரிகைக்கும், முரசொலி பத்திரிகைக்கும் பல லட்ச ரூபாய்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மக்களால் மதிக்கப்படுகிற தென்னகம் பத்திரிகைக்கு 195 ரூபாயும் மக்களால் அதிகமாக விரும்பப்படுகிற தினமலர் பத்திரிகைக்கு 289 ரூபாயும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விளம்பரங்களைத் தருவதற்கு அன்றைக்கு என்ன முறைகளைக் கடைப் பிடித்தார்கள்? அந்த முறைகள் சரிதானா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், அந்தப் பட்டியலிலே முன்னாலே இருக்கின்ற விவரங்களை நான் முதலில் சொல்லவில்லை, இப்போது சொல்லி விடுகிறேன், சொல்லிவிட்டு பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதில் அளிக்கிறேன். இந்து பத்திரிகைக்கு ரூ. 11,08,738, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு ரூ. 13,06,800. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் சொல்கிறேன். அன்று இருந்த அரசு எந்த அடிப்படையிலே விளம்பரங்களைத் தந்தது என்பதை இந்த அரசு சொல்ல முடியாது.

1978 மார்ச் 4]

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்களிலே பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிலே முறைகேடுகள் இருக்கின்றனவா, அப்படி இருந்தால் அவைகள்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, விளம்பரம் தருவதில் ஒன்றும் இருப்பதில்லை. விளம்பரம் தந்திருக்கிறார்கள். விளம்பரத்திற்குப் பணம் தந்திருக்கிறார்கள், அதற்கான சில விதிமுறைகள் அன்றைக்கும் வகுத்திருக்கிறார்கள். இன்றைக்கும் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஏற்கனவே விளம்பரங்கள் கொடுத்ததில் முறைகேடுகள் இருக்கின்றன என்பதை இந்த மன்றமே அறிகிறது. இப்போதாகிலும் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு ஏதாவது ஒரு அடிப்படை கொள்கை வகுக்கப்பட்டு அரசு விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா ? எந்த அடிப்படையில் இப்போது கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முன்னாலே இருந்த முறைகேடுகள் பற்றி இந்த அரசுக்குத் தெரியாது. இன்றைக்கு அரசு விளம்பரம் கொடுப்பதற்கான சில விதிமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படையாக விற்பனையாகும் பிரதிகள், இதழ்களின் தரம், தன்மை, ஒழுங்காக வெளியிடப்படும் முறை, பத்திரிகை விதிமுறைகள் பத்திரிகை தர்மம் இவைகளைக் கடைப்பிடிக்கும் பழக்கம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பத்திரிகைகள் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெறுகின்றன. அதற்குப் பிறகு அரசு விளம்பரம் வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாயூரம் ஒன்றியத்தின் பாலங்கள்.

* வினா 389— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், சேத்தூர் பஞ்சாயத்தில் உடையூர் பருத்திக்குடியை இணைக்கப் பாலம் ஒன்று ஒன்றியத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்